# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

38

# மலையகத்தில் நடந்த புரட்சிக்கான முன்னெடுப்புக்கள்

டட்லி சேனநாயக்கா தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை (பௌத்த மகாசங்கத்தினரது எதிர்ப்புகளுக்குப் பயந்து) கைவிட்டுவிட்டதாக அறிவித்ததும், தமிழரசுக் கட்சி வடக்குக் கிழக்கில் மீண்டும் ஒரு பெரிய போராட்டத்தை நடத்தும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் அவர்கள், டட்லியின் அமைச்சரவையில் அங்கம் வகித்த திருச்செல்வத்தை பதவி விலகும்படி செய்ததுதான் மிகப் பெரிய போராட்டம் என்றும், சிறீலங்கா பாராளுமன்றத்தில்



மேன்மை மிகு உறுப்பினர்களாக தொடர்ந்து இருப்பதன் மூலம் இழந்த உரிமைகளைப் பெற்றுவிடலாம் என்றும் மக்களை நம்பும்படி சொன்னார்கள்.

இந்தக் காலகட்டத்தில் - இலங்கையின் மரபுவழிக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து நா.சண்முகதாசன் தலைமையில் இயங்கிய கம்யூனிஸ்ட் கட்சி, பாராளுமன்றப் பாதையை நிராகரித்து மக்களை புரட்சி செய்யும்படி தூண்டும் வேலைத் திட்டத்தை முன்வைத்து செயற்பட்டது.

குறிப்பாக அக்கட்சியின் வாலிபர் இயக்கமும், மலையகத் தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில் அமைக்கப்பட்ட செங்கொடிச் சங்கமும் மக்கள் மத்தியில் போராட்ட உணர்வுகளை வளர்த்தன.

தோட்டத்துரைமாரினதும், அவர்களது கையாட்களான கங்காணிமாரினதும், சர்வாதிகாரத்துக்கு பயந்து, அடங்கிப் போய், அழுது தொழுது வாழ்ந்த தோட்டத் தொழிலாளர்களை செங்கொடிச் சங்கத்தின் நடவடிக்கைகள் நிமிர்ந்து நிற்கச் செய்தன. தொழிலாளர்கள் ஒன்றுபட்டால் எந்தத் தடையையும் தகர்த்தெறியலாம். அடக்கியாள்பவர்களும், அடிப்பவர்களும் வானத்தில் இருந்து குதித்தவர்களல்ல. அடிவாங்குபவர்கள் குனியக் குனியத்தான் அடிப்பவர்கள் அடித்துக்கொண்டே இருக்கின்றார்கள். அடிவாங்குபவர்கள் ஒன்றுபட்டு நிமிர்ந்துவிட்டால் அடிப்பவர்கள் அடிபணியவேண்டிவரும் என்கின்ற தன்னம்பிக்கை உணர்வு தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊட்டப்பட்டது.

செங்கொடிச் சங்கத்தின் தலைமையில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் நடத்திய மூன்று போராட்டங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.

முதலாவது ஹட்டன் பகுதியில் உள்ள மேபீல்ட் தோட்டத்தில் நடந்த வேலை நிறுத்தப் போராட்டம். இந்தப் போராட்டத்தில் தொழிலாளர்களினதும் ஒற்றுமையையும் எழுச்சியையும் கண்டு பயந்துபோன தோட்டத்துரை தன்னுடைய பாதுகாப்புக்கு பொலீஸ் படையை அழைக்க வேண்டியிருந்தது.

ஆயுதபாணிகளாக வந்த அந்தப் படையுடன் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் நேருக்குநேர் மோதினார்கள். பொலீஸ் ஜீப் மலையிலிருந்து உருட்டிவிடப்பட்டதுடன் பொலீசாரின் துப்பாக்கிகளும் பறிக்கப்பட்டன. பல பொலீசார் காயங்களுக்குள்ளானார்கள். தோட்டத்துரை தலைமறைவாக வேண்டிய நிலை ஏற்பட்டது.

**ஆயுதபாணிகளாக வந்த அந்தப் படையுடன் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் நேருக்குநேர் மோதினார்கள். பொலீஸ் ஜீப் மலையிலிருந்து உருட்டிவிடப்பட்டதுடன் பொலீசாரின் துப்பாக்கிகளும் பறிக்கப்பட்டன. பல பொலீசார் காயங்களுக்குள்ளானார்கள். தோட்டத்துரை தலைமறைவாக வேண்டிய நிலை ஏற்பட்டது.**

இது காலாகாலமாக அடிமைகளாக வாழ்ந்த தொழிலாளர்களை தலைநிமிரச்செய்த ஒரு வரலாற்று சம்பவம் மட்டுமல்லாமல், அடக்கி ஒடுக்கப்படுபவர்கள் ஒன்று திரண்டால், அடக்குபவர்களின் நிலை என்னாகும் என்பதையும் எடுத்துக் காட்டிய ஒரு போராட்டமாகவும் அமைந்தது.

இரண்டாவது வட்டகொடை, தலவாக்கொல பகுதியில் உள்ள மடக்கம்புற தோட்டத்தில் நடைபெற்ற போராட்டமாகும். இப்போராட்டம் மேபீல்ட் போராட்டத்தைப்போல் மிகப் பெரிய போராட்டமாக அமையாவிட்டாலும் தொழிலாளர்களது கோரிக்கைகளை ஓரளவுக்காவது நிறைவேற்றிய போராட்டமாகும்.

மூன்றாவது- பதுளை மாவட்டத்திலுள்ள கினாகலைத் தோட்டத்தில் நடைபெற்ற போராட்டமாகும். இப் போராட்டத்தில் பொலீஸ் துப்பாக்கிச் சூட்டுக்கு இரண்டு தொழிலாளர்கள் பலியானார்கள்.

இவ்வாறு தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் புரட்சிகர உணர்வை வளர்த்த செஞ்சொடிச் சங்கம் பிற்காலத்தில் தான் சார்ந்த கட்சியின் நடைமுறை சாராத ஏட்டுச் சித்தாந்த நடவடிக்கைகள் காரணமாக முனை மழுங்கிப்போனது. இதை மழுங்கடிப்பதில் சிங்கள இனவாதிகளும், தமிழ் நிலப்பிரபுத்துவ மற்றும் அரை நிலப்பிரபுத்துவப் பிரிவினரும் முன்நின்று செயற்பட்டனர்.

தமிழ் நிலப்பிரபுத்துவ மற்றும் அரை நிலப்பிரபுத்துவ பிரிவினர் பௌத்த சிங்கள இனவாத கட்சிகளுடன் கூட்டுச் சேரவும் பேரம் பேசவும் தயாராக இருந்த அளவுக்கு நா. சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து செயற்படவோ அவர்கள் மேற்கொண்ட அரச எதிர்ப்பு மற்றும் சமூக மாற்றத்துக்கான போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவோ தயாராக இருக்கவில்லை. அதற்குக் காரணம் அவர்களது இருத்தலுக்கு காரணமான சாதி அமைப்பை தகர்க்கும் போராட்டத்தில் அவ் அமைப்பு ஈடுபட்டதேயாகும்.

சிறீலங்காவில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரண்டு பௌத்த சிங்கள இனவாதக் கட்சிகளும், தமிழர்களையும் தமிழர் தாயகத்தையும் அழிப்பதற்கு இடையறாது முயன்று கொண்டிருந்த காலகட்டத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த மேட்டுக்குடியினர் அங்கிருந்த மூன்றில் இரண்டுபங்கு மக்களை சாதியின் பெயரால் அடக்கி ஒடுக்கி வைத்திருந்தனர். அந்த மக்கள் பிறப்பினால் தமிழர்களாகவும், தமிழீழ மண்



ணின் மக்களாகவும் இருந்த போதிலும் யாழ்ப்பாண மேட்டுக்குடியினர் அவர்களை மனிதர்களாகவே மதிக்கத்தயாராக இருக்கவில்லை.

பௌத்த சிங்கள இனவாதிகள் தமிழர்களை ஒரு இனம் என்ற அடிப்படையில் அவர்களுடைய பாரம்பரிய நிலங்களைப் பறித்து அவர்களது இருத்தலை கேள்விக்குறியாக்குவதன் மூலம் தமிழர் தாயகக்கோட்பாட்டை இல்லாதொழிக்க முயன்று கொண்டிருந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அவர்கள் தமிழர்களாக இருந்தபோதிலும் அவர்கள் விரும்பிய இடத்தில் நிலம் வாங்கும் உரிமை மறுக்கப்பட்டிருந்தது. ஊரின் ஒதுக்குப் புறங்களிலும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட புறம்போக்கு இடங்களிலும் மட்டுமே நிலம் வாங்க அனுமதி அளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த 60% மான பாடசாலைகளில் அந்த மக்களின் பிள்ளைகள் கல்வி கற்க அனுமதி மறுக்கப்பட்டது. அந்த மக்களின் பிள்ளைகளை கல்வி கற்க அனுமதித்த பாடசாலைகள் பலவற்றில் கூட உயர்சாதி மாணவர்களுக்கு சமமாக அவர்கள் 'வாங்கில்' அல்லது 'கதிரை'களில் அமரும் உரிமை மறுக்கப்பட்டது. அவர்கள் தரையில் அமர்ந்தே கல்விகற்கும்படி பணிக்கப்பட்டனர். கிணறு மற்றும் பொதுக் குழாய்களில், மற்ற மாணவர்களுக்கு சமமாக தண்ணீர் அருந்தக்கூட அனுமதி மறுக்கப்பட்டது.

பௌத்த சிங்கள இனவாதிகள் தமிழர்களை பேருந்துகளிலிருந்து இறக்கி வெட்டியும், உயிருடன் எரித்தும் கொலை செய்து கொண்டிருந்த நேரத்தில் *(1958)* யாழ்ப்பாணத்தில் இருந்த ஒடுக்கப்பட்ட மக்கள் பேருந்துகளில் உயர்சாதியினருக்கு சமமாக ஆசனங்களில் அமரும் உரிமை மறுக்கப்பட்டது:

'மசால வடே அப்பிட்ட எப்பா' என்று சிங்கள இனவாதிகள் தெற்கிலே கோசம் எழுப்பிக்கொண்டிருந்த காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்த தேனீர்கடை மற்றும் உணவு விடுதிகளில் தமிழர்களான இந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மற்றவர்களுக்கு சமமாக இருந்து மசாலை வடை சாப்பிடுவதற்கும், தேனீர் அருந்துவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது.

பௌத்த சிங்கள இனவாதிகள் தெற்கிலும் கிழக்கிலும் இருந்து இந்து ஆலயங்களை அழித்துவிட்டு அங்கே கௌதம புத்தரின் சிலைகளை வைத்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் விநாயகர் சிலையைத் தூக்கி கடலில் வீசிவிட்டு 'கணதெய்யோ நாண்ட கியா' (விநாயகர் குளிக்கப்போய்விட்டார்.)

என்று எழுதி வைத்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த இந்து ஆலய நிர்வாகிகள் தமிழர்களை சாதி ரீதியாகப் பிரித்து நீங்கள் ஒடுக்கப்பட்டவர் உங்களுக்கு கோவிலுக்குள்ளே வருவதற்கு அனுமதிகிடையாது என்று வெளியே நிற்க வைத்திருந்தனர்.

**- நக்கீரன்**

படிப்பகம்
www.padippakam.com